செ.வெ.எண்: 27 நாள்: 09.03.2017

**புதுக்கோட்டை மாவட்டத்தில் வெயிலின் பாதிப்பிலிருந்து பொதுமக்களை பாதுகாக்கும் வகையில் அனைத்து துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் அறிவுறுத்தல்.**

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் பேரிடர் மேலாண்மை மையம் சார்பில் கோடை காலத்தில் அதிக வெயிலின் தாக்கத்தின் மூலம் மனிதர்கள் மற்றும் கால்நடைகளுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகள் குறித்தும் அதனை எதிர்கொள்ளுதல் மற்றும் பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து அனைத்து துறை அலுவலர்களுடனான ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (09.03.2017) நடைபெற்றது.

இக்கூட்டத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் துவக்கி வைத்து பேசியதாவது:

தமிழகத்தில் கோடை காலத்தில் வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ளது. இதிலிருந்து பொதுமக்கள் மற்றும் விலங்குகளை பாதுகாக்கும் வகையில் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள தமிழகஅரசு உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் அனைத்து துறை அலுவலர்களுடனான ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இக்கூட்டத்தில் பெறப்படும் வெப்பஅலை எச்சரிக்கை தொடர்பாக பேரிடர் மேலாண்மை மையத்தில் செயல்பட்டு வரும் அவசரக்கால கட்டுப்பாடு மையத்தில் பணிபுரியும் அலுவலர்கள் தொடர்புடைய அனைத்து துறை அலுவலர்களுக்கும் தகவல் பரிமாற்றம் ஏற்படுத்திட வேண்டும். இத்தகைய நிலைமையும் சமாளிக்கும் வகையில் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள்துறை வாகனங்கள் மற்றும் உபகரணங்களுடன் தயார்நிலையில் இருக்க வேண்டும்.

மேலும் மருத்துவம் மற்றும் குடும்பநலத்துறை பணியாளர்களுக்கு வெப்ப அலையினால் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் நோய்கள் குறித்து திறனாய்வு பயிற்சி அளிப்பதுடன் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு வெப்ப தாக்கத்தினால் ஏற்படும் பாதிப்புகள் குறித்தும் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட வேண்டும். மேலும் மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளிட்ட அனைத்து பகுதிகளிலும் தடையில்லா மின்சாரம் விநியோகம் செய்யப்படுவதுடன் பொதுமக்கள் கூடும் இடங்களான பேருந்து நிலையம் மற்றும் பொது இடங்களில் மருத்துவக்குழு இருப்பதை உறுதி செய்ய வேண்டும். மேலும் உள்ளாட்சி அமைப்புகளின் மூலம் குடிநீர் மையங்களை ஏற்படுத்துதல், பொழுது போக்கு பூங்காக்களில் குடிநீர் வசதியை ஏற்படுத்த வேண்டும். எனவே நமது மாவட்டத்தை சேர்ந்த பொதுமக்கள் மற்றும் கால்நடைகளை கோடைக்கால வெயிலின் பாதிப்பிலிருந்து பாதுகாக்கும் வகையில் அனைத்து துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.ராமசாமி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி.சாந்தி, அறந்தாங்கி வருவாய் கோட்டாட்சியர் திரு.சரவணன் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**